# தில்லையம்பலப்பிள்ளையார் ஆலய வரலாறு

## 1902 - 2012



வெளியீடு :
முரளி புத்தக நிலையம் ஹற்றன்

| | | |
|---|---|---|
| **வெளியீடு** | : | தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்<br>பிரதமகுரு கந்தப்பு ஐயா அவர்கள் |
| **நூல்வடிவமைப்பு** | : | விமலராசா |
| **கணனி வடிவமைப்பு** | : | செல்வி ஜெ.திவ்யா |
| **பதிப்பகம்** | : | G.R.பதிப்பகம்,<br>கந்தசாமிகோவில் வீதி,<br>வவுனியா. |

# நூல் சிறப்பு

ஒவ்வொரு ஆலயமும் தனக்கென்ற பெருமையை கொண்டதாக காணப்படுகிறது. தில்லையம்பலப் பிள்ளையாரும் தனது பக்தியினை நூல்கள் மூலம் எடுத்துரைத்துள்ளார். புராதன கல்வெட்டு ஒன்று இந்த ஆலயத்தில் காணப்படுகின்றது. கல்வெட்டு விஷேட தினங்களில் ஓதப்படும் கல்வெட்டு ஆகும். கல்வெட்டை முன்னோர்கள் ஆணிபோன்ற ஆயுதத்தால் எழுதியிருக்கிறபடியால் தெளிவற்றுக் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டில் மும்மணிக்கோவை எனும் நூல் காணப்படுகிறது. மேலும், ஒவ்வொரு வருட ஆனி உத்தர நாளில் எம்பெருமான் ஊஞ்சற்பாட்டுப் பாடி ஊஞ்சல் ஆடுவது சிறப்பாகும். இந்த ஊஞ்சற் பாட்டில் ஒவ்வொரு பாடல் வரிகளிலும் பிள்ளையாரின் அற்புதங்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதை காணலாம். மேலும் இலக்கிய வடிவத்திற்கேற்ப காப்பு என்பனவும் கொண்டதாக இந்த ஊஞ்சற் பாட்டு அமைகிறது. இதன் மூலம் ஆலயத்தின் சிறப்பு, அற்புதம், வரலாறு, மும்மூர்த்தி சிறப்பு என்பன மிகத் தெளிவாக பாடலடிகள் மூலம் காட்டப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் ஊஞ்சற் பாட்டுடன் பிள்ளையார் கதையும் சேர்க்கப்பட்டுள்ளது. இது போல் இன்னும் பல பிள்ளையாரின் அற்புத நூல்கள் வெளிவர எம்பெருமான் அருள் புரிவாராக.

இந்த திருவூஞ்சல் பாவை 1998ம் ஆண்டு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு திரு.இராசையா குகதாசன் அவர்களால் இயற்றப்பட்டது. மேலும் ஒரு திருவூஞ்சற்பாவை வித்தகர் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் என்பவரால் 2004ம் ஆண்டு இயற்றப்பட்டது. மீண்டும் அதை மீள்பதிப்பு செய்தவர்கள் 2011ம் ஆண்டு திருவம்பலம் கணேசதாசன் (யாழ்பல்கலைக்கழகம்) பூசகரின் மகன். அந்த வரிசையில் இதை ஒரு புத்தக வடிவில் அமைத்து 2012ம் ஆண்டு வெளியிடப்படுகிறது. இதை புத்தகவடிவில் தில்லையம்பலப்பிள்ளையார் கோவில் பூசகரின் மகன் விமலராசா அவர்களால் வடிவமைக்கப்பட்டு வவுனியாவில் உள்ள G.R.Publication நிறுவனத்தினரால் பதிப்புச் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது என்பதும் பெருமைக்குரியது.

# அமைவிடம்

இலங்கைத் திருநாட்டின் வடபகுதியின் வடமராட்சி கிழக்கு எல்லையில் இயற்கை எழில் கொஞ்சும் கரவெட்டி கிழக்கில் தில்லையம்பலப் பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது.

பருத்தித்துறை சாவகச்சேரி பிரதான வீதியில் இடது பக்கமாக உள்ள வரணி வீதியில் ஒரு மைல் கல் தூரத்தில் உள்ளது இந்த ஆலயம். இந்த ஆலயத்தின் முன் வாசலில் பனைமரச்சோலை காணப்படுகிறது. வடக்குப்பகுதியில் வயலும் வயல் சார்ந்த இடமாகவும், தெற்குப் பகுதியில் வயலும் கடலும் கடல் சார்ந்த காற்றோட்டமான இடமாகவும், மேற்குப்பகுதி பனைமரச்சோலையாகவும் காணப்படுகிறது. கோவிலின் இரண்டு பக்கமும் இரண்டு மடங்களும் காணப்படுகிறது. அத்துடன் இரண்டு நன்னீர் கிணறுகளும் காணப்படுகிறது. கோவிலின் நடுப்பகுதியில் ஒரு வேப்பமரமும் பரந்து காணப்படுவது மிகவும் பிரயோசனமாகவுள்ளது. சுற்றுவட்டம் வெளிவீதி மதில்களால் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று தில்லையம்பலப் பிள்ளையார் பக்தர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார் என்றால் மிகையாகாது. இந்த ஆலயம் மிகவும் ஒரு நகரத்தில் இருந்து தனிமைப்பட்ட இடத்தில் மிக மிக அமைதியான இடத்தில் அமைந்திருப்பது மிகவும் சிறப்பாக காணப்படுகிறது.

# மூர்த்தி சிறப்பு

இலங்கைத் திருநாட்டில் பல்வேறு ஆலயங்களின் மூர்த்தியைப் போல இந்த ஆலயத்திலும் மூர்த்தியின் சிறப்பு புகழ்வாய்ந்தது. ஆலயத்தின் மூர்த்தியானது தில்லையம்பலப்பிள்ளையார் ஆகும். இம் மூர்த்தி மிகவும் உன்னதமானது. ஏனென்றால் இந்த ஆலயமூர்த்தி ஒரு சுயம்பு லிங்கமாகும். சுயம்பு என்பதன் பொருள் தானாகத் தோன்றியதாகும். பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த ஆலய மூர்த்தி இன்றும் புதுப்பொலிவுடன் திகழ்கின்றது.

விலங்குகளுக்காக சிறப்பாக தோன்றிய இந்த ஆலயம் வடமாகாணத்தில் இது மட்டுமே காணப்படுவது மிக சிறப்பான அம்சமாகும். மாடுகளுக்காக சிறப்பாக போற்றப்படுகிறது. வடபுல பிரதேசங்களில் மாடு கன்று ஈன்றவுடன் எடுக்கப்படும் முதற் பால் இந்த இறைவனுக்கே உரிய அபிஷேகப் பால் என்பதை உறுதிப்படக் கூறமுடியும். யார் ஒருவர் முதல் முதலில் ஒரு வண்டில் வாங்கினாலோ அல்லது ஒரு வாகனம் வாங்கினாலோ இந்த ஆலயம் சென்று வழிபடுவதை காணக்கூடியதாக இருக்கும். வயலும் வயல் சார்ந்த இடம் என்பதால் உழைத்து கஷ்டப்படும் விவசாயிகள் தாகம் தீர்க்க இந்த விநாயகர் கோவிலுக்கு வந்து, ஓய்வு எடுத்துச் செல்வதை காணக்கூடியதாக இருக்கும். இது ஒரு மேய்ச்சல் நிலம் என்பதால் தண்ணீர் குடிக்க வரும் மாடுகள் குளத்து நீரில் வட்ட வடிவமாக நின்று தண்ணீர் குடிப்பதையும் காணக்கூடியதாக இருக்கும். இந்தப் பிள்ளையார் பசியுடன் யாரையும் திரும்பிச் செல்லவிடமாட்டார். ஏதோ ஒரு வகையில் உணவு கொடுத்துத்தான் அனுப்புவார். தில்லையம்பலப் பிள்ளையார் மூர்த்தி சிறப்பைப் பற்றி இன்னும் கூறிக்கொண்டே போகலாம்.

# தலச்சிறப்பு

தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலுக்கு நேர்த்திக்கடனைச் செய்ய வரும் பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமைகளைத்தான் பெரிதும் விரும்புவார்கள். காரணம் விடுமுறை என்பதால் கோவிலுக்கு வரும் பக்தர்கள் அன்னதானம் கொடுப்பார்கள். மாடு கன்று ஈன்றவுடன் முதற் பால் பிள்ளையாருக்கு அபிஷேகத்திற்கு கொடுப்பார்கள். சிலரது மாடுகளுக்கு நோய்வரும் அப்போ முதலில் ஈன்ற கன்று பிள்ளையாருக்கு என நினைத்து எதுவித கஷ்டமும் இல்லாமல் கன்று ஈன்றவுடன் முதல் கன்றை கோவிலடியில் கொண்டுவந்து விட்டுச் செல்வதைக் காணலாம். விவசாயிகள் முதலில் சூடு மிதித்த நெல்லை எமக்கு கூடுதல் அறுவடைக்கு பிள்ளையாரே காரணம் என நினைத்து பிள்ளையாருக்குக் கொடுத்துவிட்டு மற்றைய பகுதியைத்தான் வீட்டிற்கு கொண்டு செல்வார்கள்.

சில பக்தர்கள் தமது மாட்டில் இருந்து எடுத்த நெய்யில் பிள்ளையாருக்கு பலகாரம் செய்து படைப்பார்கள். சிலர் தமது முதல் வழைப்பழம், முதல் பலாப்பழம், முதல் மாம்பழம் என பிள்ளையாருக்கு முதல் படைத்தால் தமது வளம் மென்மேலும் பெருகும் என நினைத்து வழிபடுவது காணக்கூடியதாக இருக்கிறது. சில பக்தர்கள் திணை மாவில் நெய் விளக்கு ஏற்றியும் வழிபடுவார்கள்.

சில பக்தர்கள் முதல் முடி இறக்குதல், பால் பருக்குதல், பிள்ளையார் தலத்தில் செய்வதும் காணமுடிகிறது. நமது வாழ்நாளில் எதையும் முதலில் பிள்ளையாருக்குச் செய்யவே விரும்புவோம். இறைவன் பரம்பொருளின் எண்ணமும் எதைச் செய்தாலும் முதலில் பிள்ளையாருக்குச் செய்த பின்பு தான் மற்றைய இறைவர்களுக்கு செய்ய வேண்டும் என்பதே.

இந்தக் கோவிலின் வடக்கே சிறிய குளம் காணப்படுகிறது. கோவிலுக்கு வரும் பக்தர்கள் அதில் நீராடி பிள்ளையாரை வணங்கிச் செல்வதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

# ஆலயம்

இறைவனை வழிபடுவதற்குரிய இடம் ஆலயமாகும். மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு முகப்பட்டு இறைவழிபாட்டினை ஆற்றுவதற்கு ஆலயம் சிறந்த இடமாகும். யாவற்றையும் கடந்து நிற்கும் இறைவன், தன்னை வழிபடுவோர்க்கு அருட்காட்சியைக் கொடுக்கும் பொருட்டு சிறப்பாக எழுந்தருளி இருக்கும் இடம் ஆலயமாகும். ஆன்மாக்கள் தமது மனதை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் லயப்படுகின்றமையால் ஆலயம் என்ற பெயரைப் பெறுகின்றது.

இறைவன் தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான் என்பது இந்து மக்களது நம்பிக்கையாகும். எனினும் பசுவின் உடலெங்கும் பால் காணப்பட்டாலும் அதன் மடியிலிருந்தே பாலைப் பெற முடியும். அதே போன்றே கண்ணுக்குத் தெரியா மின்சாரம் அதன் கம்பிகளில் காணப்பட்டாலும் அதிலிருந்து வெளிச்சத்தைப் பெற வேண்டுமானால் மின்குமிழும் அதைப் பற்ற வைப்பதற்கு ஒரு சுவிச்சும் தேவைப்படுவது போல இறைவனது அருளைப் பெறுவதற்கு ஆலயங்கள் இன்றியமையாததாகின்றன. ஆலயங்கள் அன்பு, அமைதி, தெய்வீகம், சாந்தம், தூய்மை என்பன நிறைந்துள்ள இடங்களாகும்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்" என திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். இறைவன் உயிருக்குயிராய் இருக்கின்ற காரணத்தினாலேயே உயிர் குடியிருக்கும் சரீரமும் அவன் விரும்பியுறையுமிடமாகும். அத்தகைய சரீரத்தின் புறவடிவமாக ஆலயங்கள் விளங்குகின்றன.

ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையிலே நேராகப்படுத்திருப்பது போன்ற அமைப்பிலே காணப்படுகின்றன. ஆலய அமைப்பில் பிரதான பகுதியாகக் கருப்பக்கிரகம் விளங்குகிறது. அது சிரசினைக் குறிக்கின்றது. அதனை அடுத்து அமைவது அர்த்த மண்டபமாகும். அர்த்த மண்டபம்

கழுத்தினைக் குறிக்கும். அதனையடுத்துக் காணப்படுவது மகாமண்டபம். அது மார்பினைக் குறிக்கும். அடுத்ததாக உள்ள தரிசன மண்டபம் வயிற்றைக் குறிக்கும். ஏனைய அலங்கார மண்டபம், சபா மண்டபம் என்பன கால்களைக் குறிக்கும் இறுதியாக அமையும் இராஜகோபுரம் பாதங்களைக் குறிக்கும்.

ஆலயத்திற்குச் செல்லும் போது முதலில் தெரிவது கோபுரமாகும். அது கீழே அகன்று மேலே ஒடுங்கிக் கலசங்களிலே நிறைவுறும். தொலைவில் வரும் பொழுதே அனைவரதும் மனதில் இறைபக்தி தோன்றுவதற்காக அதனை உயரமாக அமைத்திருக்கிறார்கள். இறைவனது அருட் செயல்களையும் திருவிளையாடல்களையும் காட்டும் உருவங்களும் காட்சிகளும் அதன்கண் அமையும். அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் இறைவனின் முழுமுதல் தன்மையையுணர்ந்து அவன் மீது பக்தி செலுத்த வேண்டுமென்ற எண்ணம் உருவாகும் ஆலயத்திற்குள் சென்றதும்.

ஆலயத்தில் ஒரு மனிதனின் ஆன்மீகம் வளர்க்கப்படுகின்றது. கடவுள் பக்தியை வளர்த்துக்கொள்ள ஆலய வழிபாடு உதவுகின்றது. ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையை சைவசமயத்தின் பிராமண நூல்களான வேதங்கள், சிவாகமங்கள், பன்னிரு திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் என்பன கூறுகின்றன. ஆலயங்கள் அன்பு, அமைதி, தெய்வீகம், சாந்தம், தூய்மை என்பன நிறைந்துள்ள இடங்களாகும். அங்கு சென்று இறைவனை உள்ளன்போடு மனம், மொழி, மெய்களால் வழிபடும் போது மனம் தூய்மையடைகின்றது. எம்மனத்திலுள்ள குறைகளை, எமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களையும் இறைவனிடம் கூறி ஆறுதல் பெறமுடிகின்றது. எமது மனமானது அலைபாயும் இயல்புடையது. அந்த மனதை ஒருநிலைப்படுத்த ஆலயமே மிகச்சிறந்த இடமாகும். மனதில் இறைவனை மட்டும் நினைக்க வைக்க ஆலயம் பெரிதும் பயன்படுகின்றது. ஆலயத்திற்குச் செல்லும் எல்லோரையும் பாகுபாடற்ற உண்மையான பக்தனாக ஆலயம் மாற்றி விடுகின்றது. ஆலயங்களில் நடைபெறும்

திருவிழாக்களினால் மனிதசமுதாயம் வளம்பெற்றுப் புனிதமடைகின்றது. ஆலயங்கள் மக்களிடம் நல்லொழுக்கம் பண்பாடு என்பன ஏற்படவும் உதவுகின்றன. ஆலயங்களில் நிகழ்கின்ற பூசை ஆராதனைகள், மந்திர ஒலிகள் என்பன வழிபடுவோரில் பக்தியை ஏற்படுத்துகின்றன. அவை எல்லோரையும் உணர்வுபூர்வமாக இறைவனை ஒருமனப்பட்டு வழிபாடு செய்யத் தூண்டுதலாக அமைகின்றன. ஆலயங்களில் புராணபடனம், திருமுறைகள் ஓதுதல், சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்கள், சமயம் அறிவை வளர்த்துக் கொள்ளவும் வாழ்க்கை விழுமியங்களை அறிந்து கொள்ளவும் வாழ்வினை நன்நெறியால் செலுத்தவும் முடியும்.

ஆலயத்திற்குச் செல்லும் போது ஆசாரமுறைப்படி செல்ல வேண்டும். நீராடி தூய ஆடைகளை அணிந்து விபூதிதரித்து அகப்புறத் தூய்மையுடையவராய், ஆண்கள், வேட்டி சால்வையுடலும், பெண்கள் ஆசாரமாக உடையணிந்தும் செல்ல வேண்டும்.

இறைவன் இவ்வுடலை எமக்கு தந்தமைக்கான காரணம் அவளை வழிபட்டு முத்தி பெற வேண்டும் என்பதற்காகவே சைவர்கள் நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்று சிரத்தையோடு விதிப்படி சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். இதனாலேயே நம் முன்னோர்கள் "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனக் கூறினர். தினமும் ஆலயத்திற்குச் செல்ல இயலாதவர்கள் புண்ணிய காலங்களிலும், விசேட விரத நாட்களிலும் பண்டிகைக் காலத்திலும் குடும்பத்தாருடன் சென்று ஆலயத்தில் வழிபாடு செய்தல் வேண்டும். ஆலயத்திற்குச் செல்லும் போது வேறு விடயங்களில் கருத்தை செலுத்துதல் ஆகாது. கடவுட் சிந்தனையுடன் இறைவனின் நாமங்களை உச்சரித்தும் தேவாரம், திருவாசகம், தோத்திரப் பாடல்களை மனதிற்குள் ஓதிக்கொண்டும் செல்லுதல் வேண்டும்.

ஆலயத்திற்குச் செல்லும் போது தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, மலர்கள், கர்ப்பூரம் முதலிய பூசைப் பொருட்களைப் புனிதமாக ஒரு பாத்திரத்தில் வைத்து அரைக்கு மேலே உயர்த்திக்

கொண்டு செல்லுதல் முறையாகும். அவற்றைக் கொண்டு செல்ல முடியாதவர்கள் இறைவனுக்கு பூசை செய்யும் போது தேவைப்படும் பூக்களையோ, வில்வம், முட்கிழுவை, மாவிலங்கு, வன்னி, விளாத்தி, போன்ற பாத்திரங்களையோ கொண்டு செல்லுதல் முறையாகும். இதனையே "யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை" எனத் திருமந்திரம் கூறுகின்றது.

மச்சம், மாமிசம் உண்ட பின்னரோ, மதுபானம் அருந்திய பின்னரோ ஆலயத்திற்குச் செல்லுதல் ஆகாது. அவ்வாறே ஆசௌசம், வீட்டுக்கு வில்க்கு உள்ளவர்களும் அக்காலப்பகுதியில் ஆலயத்தினுள் செல்வது தவறாகும். ஆலயத்திற்கு ஆசாரமுறைப்படி செல்ல வேண்டும். குறிப்பாக பெண்கள் மிகவும் ஆசாரமாக செல்ல வேண்டும். ஆடம்பரங்களை இறைவன் விரும்புவதில்லை.

ஆலயத்தில் செய்யத் தகுந்தவை செய்யக் கூடாதவை என பல விதிமுறைகளுண்டு. அவற்றின் படி நாம் நடந்து விரதங்களை உரிய முறையில் கடைப்பிடித்து இறையன்பைப் பெற்று வளர்வோமாயின் எமது மனதில் இறைவன் குடிகொண்டிருப்பான். இந்து மதத்தில் புராதன காலம் தொட்டு ஆலய வழிபாடு இடம்பெற்று வந்துள்ளமையை சங்ககால இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. எனினும் தமிழ்நாட்டில் பல்லவர் காலத்திலேயே கருங்கற்களைக் கொண்டு அழியமுடியாத ஆலயங்களை முதல் முதல் பல்லவ மன்னர்கள் அமைத்தனர். அக்காலத்திலேயே இலங்கையிலும் திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆலயங்களும் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. இக்காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களும், மன்னர்களும் இறைவன் மீது பக்தி கொண்ட கலைஞர்களும் ஆலயங்கள் அமைப்பதிலும் அவற்றில் பூஜை வழிபாடுகள் செய்வதிலும் முனைப்புடன் செயற்பட்டனர்.

இவ்வாறு மிக நீண்ட சமய வரலாற்றைக் கொண்ட எமது சமயத்தில் இளம் சந்ததியினர் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொள்வது குறைந்து வருவதை

அவதானிக்க முடிகின்றது. ஆலயங்களில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் வயதில் மூத்தவர்களையே அதிகம் காணமுடிகின்றது. இளவயதினர் ஆலய வழிபாடுகளை மேற்கொள்ளாமையும், சமய நூல்களை வாசிக்காமையுமே, இன்றைய தீயநடத்தைகட்கும் காரணமாக அமைகின்றது. எனவே எமக்குப் பின்னால் உள்ள இளம் சந்ததியினரை ஆன்மீகத்தில் ஈடுபட வைப்பது பெரியவர்களது பாரிய பொறுப்பாகும். எமது மதத்தின் தத்துவங்கள், வழிபாட்டு முறைகள், வாழ்வியல் மரபுகள் என்பவற்றை முறையாக அறிந்துகொள்ளதவர்கள் பலரை இன்று காணமுடிகின்றது. இன்றைய இளம் சந்ததியினர் தொலைக்காட்சிகளிலும் சர்வதேச வலைப்பின்னல்களிலும், கணனிகளிலும் அதிக நேரத்தை செலவிடுகின்றனர். இதனால் ஏனைய மதத்தவரது கவர்ச்சிகரமான வார்த்தைகளால் கவரப்பட்டு எமது மதத்தின் பெருமை தெரியாதவர்கள் மதம் மாறுகின்றனர். ஆனால் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்றவர்கள் தாம் வாழும் நாடுகளில் ஆலயங்களை அமைத்ததோடு திருவிழாக்கள் செய்வதையும் நாம் தொலைக்காட்சிகள் வழியாக காணக்கூடியதாக உள்ளது. ஆனால் எமது நாட்டில் சில பிரதேசங்களில் கண்டும் காணாதவர்கள் போல் இருக்கின்றார்கள். ஆலயங்கள் எமது வழிபாட்டின் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றது. அந்தவகையில் வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள தில்லம்பலப்பிள்ளையார் ஆலயம் தொடர்பான சிறப்புக்களை அறிவோம்.

# இந்த ஆலய வரலாறு

இற்றைக்கு பல ஆண்டுகளுக்கு முன் 1902ம் ஆண்டில் சுயமாகத் தோன்றிய ஒரு ஆலயம் தான் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம். பல ஆண்டுகளுக்கு முன் கரவெட்டி கிழக்கின் எல்லையில் ஒரு சிறிய மேச்சல் நிலமும், அதனுடன் சேர்ந்து காணப்பட்ட சிறிய காடும், சிறிய கடல் பரப்பாகவும் காணப்பட்ட இடமே இந்த ஆலயத்தின் தோற்றமாகும்.

அந்த நாட்களில் மாடு மேய்ப்பவரான வல்லியரும் அவருடைய நண்பர்களும் அந்த நிலங்களில் தினமும் மாடு மேய்ப்பதற்காக சென்று மாலையானதும் மாடுகளையும் மேய்த்துக்கொண்டு வீடு வருவார்கள். அப்படியாக அவர்கள் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் வேளையில் அவர்களுடைய இரண்டு மாடுகள் காணாமற் போய்விட்டன. அவர்களுக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. “மாடுகள் இல்லாமல் எவ்வாறு வீடு செல்வது?” என யோசித்துக் கொண்டிருக்கும் போது, திடீரென காட்டுப்பகுதியில் இருந்து ஒரு “அசரீரி” கேட்டது. அவர்களும பயத்துடன் காது கொடுத்துக் கேட்டார்கள். “உங்களுடைய மாடுகள் திரும்பி வரவேண்டுமானால், நாளை ஒரு தேங்காய் புளியமரத்தடியில் உடைத்தால் உங்கள் மாடுகள் திரும்பி வரும்” என கூற, அவர்களும் தங்களது வீடுகளில் மாடு தொலைந்ததைக் கூறாமல், மறுநாள் ஒரு தேங்காய் வாங்கி வந்து புளியமரத்தடியில் உடைத்தார்கள். சிறிது நேரத்தில் இரண்டு மாடுகளும் வந்தன. அவர்களுக்கு மிகவும் சந்தோஷம்.

மீண்டும் அவர்கள் மாடு மேய்த்துக்கொண்டிருக்கும் ஒரு நாளில் இரண்டு மாடுகள் காணாமற் போய்விட்டன. அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. காட்டை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தவேளை மீண்டும் அதே “அசரீரி” கேட்டது “அதே புளியமரத்தடியில் ஒரு பாற்பொங்கல் பொங்கினால் உங்கள் மாடுகள் திரும்பி வரும்” என கூற அவர்களுக்கு ஒரு பயம் கலந்த ஆச்சரியம்! ஊருக்கும் அந்த கோவில் இருக்கும் இடத்திற்கும் எப்படியும் நாலு மைல் தூரம்

இருக்கும். அடுத்த நாள் பொங்கல் பொங்குவோம் என முடிவெடுத்து, ஊர் போனதும் பொங்கலுக்கு தேவையானவற்றை எடுத்து வந்து அடுத்த நாள் மாடுகளில் பால் கறந்து பொங்கல் செய்தார்கள். பொங்கலை எவ்விடத்தில் படைப்பது என்று சிந்தித்துக்கொண்டார்கள். அப்போது அதே "அசரீரி" சொன்னது, "புளியமரத்தடியிலேயே படைக்கவும்." அதேபோல் அவர்களும் மரத்தடியில் படைத்து முடிந்ததும் பொங்கலை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது இரண்டு காணாமற் போன மாடுகளும் வந்து சேர்ந்தன. அவர்களுக்கு மிகவும் சந்தோஷம். பொங்கிய பானையை மரத்தடியில் கவிழ்த்து வைத்துவிட்டு, ஊர் வந்ததும் நடந்தவற்றை ஊர் மக்களுக்கு தெரியப்படுத்தினார்கள். ஊர்மக்கள் எல்லோரும் திரண்டு வந்து பொங்கல் செய்து வழிபடத் தொடங்கினார்கள். அப்போது ஒருநாள் வல்லியாரும் நண்பர்களும் இந்த இறைவனை "என்ன பெயர் கொண்டு அழைக்கலாம்?" என சிந்தித்தனர். அப்போது மீண்டும் அந்த "அசரீரி" சொல்லியது என்னை தில்லையம்பலப்பிள்ளையார் என்று அழையுங்கள். நான் இந்தியாவில் தில்லையில் இருந்து வந்தவன்" என்று கூறியதும் எல்லோரும் அதன்படியே வணங்கினர். வல்லியருக்கு இறைவன் மழையில் நனைவது மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒருநாள் வல்லியார் நண்பர்களிடம் "இவ்விடத்தில் ஒரு கோவில் கட்டிவிடலாம் தானே" என கூறினார். அப்போது மீண்டும் "அசரீரி" கேட்டது. "எனக்கு குடில் வடிவில் கோவில் அமைக்க வேண்டும். தேக்குமரம் அல்லாது வேறு மரம் சேர்க்கக்கூடாது." என்றார் பிள்ளையார். அதன்படியே வல்லியரும் அவரது நண்பர்களும் அறுகோணவடிவில் மாடுகளுக்காக அமைக்கப்பட்ட குடில் போல அமைத்தார்கள். அந்தக் கோவில் இன்றும் அறுகோணவடிவில் தான் காட்சி தருகின்றது. இந்தியாவில் தில்லையிலும் மூலஸ்தானம் அறுகோணவடிவில் தான் இன்றும் காட்சி தருகிறது.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் உடைக்கப்பட்ட ஆலயவரியில் இந்த ஆலயமும் ஒன்றாகும். உடைக்கப்பட்டாலும் ஆங்கிலேயருக்குத் தெரியாமல் பூசை செய்த அந்தணர் தினமும் விளக்கேற்றி வைத்துவிட்டு காவோலையால் மூடிவிட்டு வரும் வழக்கமும் சிறிது காலம் காணப்பட்டதாக அக்காலத்தில் வாழ்ந்தோர் கூறியுள்ளனர். சிரமத்தின்

மத்தியில் கால்நடையாகச் சென்றுதான் விளக்கேற்றிவர வேண்டும். இக்கோவில் பிள்ளையார் தனிமையை விரும்புவராக காணப்படுகிறார். இவ்வாலயத்தில் யார் தங்கினாலும் அவர்களுக்கு அவ்விடத்தில் தங்கமுடியாதவாறு கஷ்டங்களைக் கொடுப்பார். இதற்கு நல்ல உதாரணமாக,

இந்திய இராணுவம் ஆலயத்தில் உள்ள மடத்தில் தங்கியபோது அவர்களுக்கு நோய் வந்து அவ்விடத்தை விட்டு அகன்று விட்டார்கள். இவ்வாலயத்தில் பக்தர்கள் தவிர்ந்த யாரையும் இறைவன் ஏற்கமாட்டார் என்ற நம்பிக்கை அவ்வூர் மக்களிடம் இன்றும் நிலவிவருகிறது. இந்தக் கோவிலின் சிறப்பு என்னவென்றால், பக்தர்கள் தாம் பிள்ளையாருக்குச் செய்த பலகாரங்களை மூலஸ்தானம் வரை சென்று படைத்து, மிக அருகில் நின்று வணங்கி தம் வேண்டுதலை தெரியப்படுத்தலாம். இந்த விநாயகருக்கு மிகவும் பிடித்தது பால் அபிஷேகம், பொங்கல், மோதகம், வடை, பஞ்சாமிர்தம் என்பனவாகும். தில்லையம்பலப்பிள்ளையார் “மோதகப்பிள்ளையார்” எனவும் அழைக்கப்படுகிறார்.

# தில்லையம்பலப்பிள்ளையார் அற்புதங்கள்

தில்லையம்பலப்பிள்ளையார் தனது அருளின் சிறப்புகளால் பல அற்புதங்களைச் செய்துள்ளார். முதலில் பிள்ளையார் தோன்றியதே ஒரு அற்புதம் ஆகும். தமிழ் மக்கள் தமது கவலைகளை சொல்லி கவலைப்பட்டபோது பக்தர்களின் கண்ணீர் துடைக்க தோன்றியவரே இந்தப் பிள்ளையார். இப்போதும் பக்தர்களின் தேவையறிந்து தாமாகவே குறைகளைத் தீர்த்து வைப்பார்.

ஒருமுறை பக்தர்கள் செய்யும் பலகாரங்களை மரத்தின் மேல் இருந்து காகம் எச்சம் போடுவதால், மிகுந்த சிரமப்பட்டதால் ஒரு மடம் அமைக்க அருள் தரும்படி பிள்ளையாரை வேண்டியபோது, அதற்கு பிள்ளையார் கனவில் வந்து தந்த பதில் விசித்திரமானது! அதாவது "காகம் எச்சம் போட்டாலும் நான் அதை ஏற்றுக்கொள்வேன்" என்று கூறியதாக ஊர்மக்கள் கூறுவார்கள். பிள்ளையார் தான் இருக்கும் இடம் கூட மாட்டுக்குடில் வடிவமே போதும். பெரிய கோவில் வடிவம் தேவையில்லையென கூறியது பிள்ளையாரின் ஏழ்மையை குறிக்கிறது. அந்த நாட்களில் பக்தர்கள் பிள்ளையாருக்கு பொங்கல் செய்து படைத்துவிட்டு தாம் கொண்டு சென்ற பானைகளை புளியமரத்தடியிலேயே வைத்துவிட்டு வருவார்கள். அப்போது இரண்டு திருடர்கள் வந்து பானைகளை திருடமுற்பட்டபோது, அவர்களுக்கு கண்கள் தெரியாமல் போய்விட்டது. அப்போது கோவில் அந்தணரை எழுப்பிய பிள்ளையார் "எனது இடத்தில் களவு எடுக்க வந்தவர்களுக்கு கண் தெரியாமல் செய்துவிட்டேன். நீ அவர்களுக்கு விபூதி போட்டு மன்னித்து விடு" என்றார். அதுபோல் காலையில் அந்தணர் சென்று திருடர்களுக்கு விபூதி போட்டவுடன், அவர்களுக்கு மீண்டும் பார்வை வரப்பெற்றது! அவர்களும் மன்னிப்புக் கேட்டு சென்றனர்.

தில்லைம்பலப்பிள்ளையார் கோவிலுக்கு பக்தர்கள் கொண்டு வந்த புதிய பாத்திரங்களை கோவிலில் விட்டுச் செல்வதும் இன்றும் வழமையாக காணப்படுகிறது. அதுபோல் பல ஆண்டுகளுக்கு முன் கோவிலில் தொண்டு செய்த ஒருவர் காலப்போக்கில் கோவிலில்

உள்ள பித்தளைப் பாத்திரங்களைத் திருடி விற்றுவந்திருக்கிறார். அவரும் சில காலம் செல்ல ஊருக்கு போனவர் திரும்பி வரவில்லை. என்னவென்றால் அவருக்கும் கண் தெரியாமல் போய்விட்டது. அவரே ஊர்மக்களிடம் கூறியிருக்கிறார். கோவிலில் திருடியதற்கு பிள்ளையார் தண்டனை கொடுத்துவிட்டார் என்றாராம்.

கோவிலுக்கு வரும் பக்தர்கள் கோவிலில் உள்ள பாத்திரங்களை தவறுதலாக எடுத்துச் சென்றாலும் இடைநடுவில் வாகனம் தடைப்பட்டு விடும். பின்பு பிள்ளையாருக்கு சொந்தமான பொருட்களை எடுத்து வந்துவிட்டோமோ எனத் தேடிப்பார்த்து திருப்பி கோவிலில் ஒப்படைத்த பின் வாகனம் ஓட ஆரம்பித்த வரலாறும் உண்டு.

கோவிலின் முன் பனைமரக்காடுகள் காணப்பட்டன. அங்கு கூடுதலான பன்றிகளும் காணப்பட்டன. அதை வேட்டையாடுவதற்கு எவ்வளவு முயற்சி செய்தாலும் அப்பன்றிகளை வேட்டையாட முடியாதென வேட்டையாடுபவர்கள் கதைப்பார்களாம் என்ற வரலாறும் உண்டு.

இற்றைக்கு 30 வருடங்களுக்கு முன் கோவிலின் முன் சபா மண்டபத்தில் ஆறு வெள்ளைக்கல்லில் செதுக்கப்பட்ட தூண்கள் தூக்கி நிறுத்தப்பட்ட தொண்டை ஒரு சில இளம்பக்தர்களே மேற்கொண்டனர். அதன்போது அந்தணர் கூறினார். "இத்தூண்களைத் தூக்கி நிறுத்திய அனைவரும் வெளிநாடு சென்று விடுவார்கள்" என்று அதுபோல் அனைவரும் வெளிநாடு சென்றுவிட்டனர் என்ற வரலாறும் உண்டு.

முன்பு ஒருநாள் ஒரு பக்தர் திருமணம் முடித்து முதன்முதலில் பிள்ளையாரை வணங்க மோட்டார் வாகனத்தில் வந்தார். அப்போது கோவில் பூட்டியிருந்தது. அந்தணர் வர தாமதம் ஏற்பட்டது. தாமதிக்க விரும்பாத பக்தர் கோவில் கதவினூடாக பணத்தைப் போட்டுவிட்டு வீடு சென்றார். அவருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டது. காரணமும் தெரியவில்லை. அன்றிரவு அந்தணர் கனவில் வந்த பிள்ளையார் "அவர் பணத்தை கதவினூடாகப் போட்டது எனக்கு பிடிக்கவில்லை. அவன் வந்து பொங்கல் செய்து வழிபட்டால் சுகம் வரும்" என கூற அந்த பக்தனும் அதன்படியே செய்ய பூரண சுகம் வந்த வரலாறும் உண்டு.

உ
சிவமயம்

# பிள்ளையார்கதை



மந்திர கிரியில் வடபால் ஆங்குஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல் சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன்அடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்துஅரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்குஅருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறஎன மொழிய

மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளையாகச்
சென்றுஅவன் வளர்ந்து சிலபகல் கழிந்தால்
மன்றல் செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வுஆகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்புஇறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையோன் யான்என
மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான் எனக்
கருந்தட நெடுங்கண் கவுரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் அறிவோம் யாம்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்

குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்இடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினிற் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினில் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தையாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்களன
மாடக யாழ்முரல் மங்கைர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழவி வந்துஎனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்

அவனையான் சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியில் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்அமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன் எதிர்சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துத்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக் காயும்
கற்பூரத் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளினை வணங்கத்

தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில்உள் ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில் மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னுலுங் கமுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து

நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் உடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சைஆம் பதிபுக
ஏரார் வழியின் எண் திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வருங்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்து இழை மடந்தை திரம்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்த விளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே
இவ்வகை யாய்விளை யாடுவோம் ஈங்கென
அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகிரி உரித்தோன் மதகரி யாக
மதர்வழி உமைபிடி வடிவம் தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ

அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வின்புகழைக் கையொடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீள் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிகு மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்
கான் அமர் கொடிய கடுவிலங் காலும்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்

திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்த அடற்படை சூழக்
கைமுகம் படைத்த காயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்துஅவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்து அவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ சிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த மூசிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே
ஓகையோடு எழுந்துஅங்கு உயர்படை சூழ

வாகையும் புனைந்து வரும்பழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபொல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்

அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ந வகைஇனிக் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பிர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனக் கிளத்துதல் உற்றான்
அக்குநீறணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்
சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒரு மருப்பு உடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகமும் ஒருகையிற் செபஞ்செய்

உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யாவரும் யாவருந் துதிப்ப
நன்றி தந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம்உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்பிநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிட லாம்எனத்
தேவாகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்து எமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்

பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம்முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்துஅமிர்தத்தால் அபிடே கித்துக்
கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசர புத்திரன் என்னும்மந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்இரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணபதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரப் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்

நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகள் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செலுவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை அவன் தாள் அர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளன்னை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மகிதலந் தன்னில் மலர்கொடுஅர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்

உருக்குமணி என்னும் ஒண்டாடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற்குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடுஅர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசை புரிந்து
மிகமிக மனதில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனைஅர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகன்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வோம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கொடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்

சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீரென
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுங் தானுங்
சூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குஉடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறிவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீள்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கைிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்

பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண்எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
ஆறுமுகக் கடவுள்அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர் என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகம் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் சூழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்துஇனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு

அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறைவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல் கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேன்என
எம்பெரு மானும் யான்வென் றேன்என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன்அங்கு உரைப்பக்

கன்றிய மனத்தோடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே
கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவுஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலில் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்

தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்த மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்

கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென
ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாள் மலர்ப்பங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்த விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன் தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை வணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து

சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுஉழுந்த தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்நறுங் குழல்உமை சாபம்இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்கதை ஏந்துந் துளவு மாலையன்
விடப்பணி உருவம் விட்டுநீங் கியதும்
பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிறும் புவியின் மன்னாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்போல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்

மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடும்நாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண் சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அந்தந் தன்னில் அணியிழை செறிந்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையை காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொன்னை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம்அவட்கு அருளக்
கொண்டுபொய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணிகட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்

துண்ணெய எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்.
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டும்தன் அகமதிற் சென்று

இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்ததுத்
தண்ணீர் கொணர்ந்த தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனபட புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையல் நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழ பண்டமுஞ்
செப்பம் தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை

வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்கு அவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வல்அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடியாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

# தில்லையம்பலப் பிள்ளையார்
# ஆலய வரலாறு



G.R Publication, No: 59, Kandasamy Kovil Road, Vavuniya